THE HINDU
Region

# 'Timely intervention vital in type 1 diabetes cases'

Rajesh B Nair
PUDUCHERRY

The prevalence of type 1 diabetes among children has shown an increase these days necessitating the need to create awareness about the disease so that parents could seek timely medical intervention on identifying early symptoms of the disease.

Towards the purpose of creating awareness on type 1 diabetes, the Department of Paediatrics at the Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research (Jipmer) held a health education programme for children with the disease and their caregivers at its campus recently.

Professor of Paediatrics Dilli Kumar told *The Hindu* that the Paediatrics department of the hospital gets four to five new cases of type 1 diabetes. Around 150 children aged between 1 and 18 are currently registered with the hospital for regular follow up treatment for the disease, he said.



**Effective management:** The programme introduced parents to advancements in diabetes care. SPECIAL ARRANGEMENT

During the early stages of the disease, children will show symptoms such as excessive thirst, frequent urination, and weight loss. These early symptoms in children should not be ignored by parents, and they should seek medical opinion at the earliest, he said.

"If not diagnosed early, type 1 diabetes will lead to diabetic ketoacidosis which is a life-threatening condition characterised by altered sensorium, rapid breathing, and dehydration. So early diagnosis based on classical symptoms of diabetes helps avoid serious conditions like diabetic ketoacidosis and ICU admissions," the doctor said.

Type 1 diabetes is an autoimmune disease that primarily affects children and adolescents leading to complete insulin deficiency.Early recognition and timely intervention could significantly improve outcome of treatment and quality of life of affected patients, he said.

Jipmer, in a release, said doctors and paramedical staff interacted with children and their caregivers. The programme introduced parents to advancements in diabetes care, particularly Continuous Glucose Monitoring, a technology that enables real-time tracking of blood sugar levels through a mobile device.

"The innovation significantly reduces the need for repeated finger pricks and allows early detection of fluctuations in blood glucose levels, thereby improving safety and convenience of children. Such emerging technologies are transforming the way type 1 diabetes is managed in children," he said.

Social Service Officer, Jipmer, Nancy Premkumar discussed the challenges faced by school-going children. Information on various NGOs that are involved in helping families bear the cost of insulin, glucometers, and testing strips was provided at the meet.

Parimala, nursing officer of Jipmer and mother of child with type 1 diabetes, also shared her experience.

தினமலர்
27-4-2026 திங்கள்




ஜிப்மரில் சர்வதேச மருத்துவ அறிவியல் அகாடமி சார்பில் நடந்த தேசிய மாநாட்டினை துவக்கி வைத்த பொறுப்பு இயக்குநர் காதம்பரி விழா, மலரை வெளியிட்டார். அருகில் முன்னாள் இயக்குநர் பரிஜா.

# ஜிப்மரில் தேசிய மருத்துவ மாநாடு

## ஆரோக்கியம் குறித்து நிபுணர்கள் ஆலோசனை

**புதுச்சேரி, ஏப். 27–**

ஜிப்மர் வளாகத்தில் சர்வதேச மருத்துவ அறிவியல் அகாடமியின் 41வது தேசிய மாநாடு நடந்தது.

ஒரே ஆரோக்கியம் என்ற கருப்பொருளில் நடந்த இந்த மாநாட்டில் மருத்துவ உலகின் நவீன முன்னேற்றங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

மாநாட்டை ஜிப்மர் பொறுப்பு இயக்குநர் காதம்பரி துவங்கி வைத்து, பேசுகையில், 'மனிதர்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய மூன்றின் ஆரோக்கியத்தையும் ஒருங்கிணைந்த முறையில் அணுகுவதன் மூலமே எதிர்கால சுகாதார சவால்களை எதிர்கொள்ள முடியும்' என்றார்.

முன்னாள் இயக்குநர் பரிஜா, மருந்துகளுக்குக் கட்டுப்படாத கிருமிகளின் அச்சுறுத்தல் குறித்து மருத்துவ துறை வல்லுநர்களுடன் கலந்துரையாடினார். டாக்டர்கள் ஜெகதீசன், துக்ரால் மருத்துவ கல்வி, ஆராய்ச்சி தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தனர்.

மருத்துவத் துறையில் சிறப்பான பங்களிப்பை வழங்கியதற்காக மருத்துவர்கள் பழனிவேல், மோகன், தியாகராஜன், பேராசிரியர் சண்முகம் ஆகியோருக்கு சர்வதேச உரை விருதுகள் வழங்கி கவுரவிக்கப்பட்டன.

சிறப்பு அமர்வுகளில் புற்றுநோய், தொற்று நோய்கள் மற்றும் மருத்துவத்தில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு குறித்து தேசிய மற்றும் சர்வதேச நிபுணர்கள் விவாதித்தனர். உறுப்பினர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

ஏற்பாடுகளை ஜிப்மர் நுண்ணுயிரியல் துறை பேராசிரியர்கள், நிர்வாகிகள் செய்திருந்தனர்.

நமது முரசு
NAMATHU MURASU
தமிழ் மக்களின் நாடித்துடிப்பு
மாலை நாளிதழ்

# புதுவை ஜிப்மரில் சர்வதேச மருத்துவ அறிவியல் அகாடமியின் தேசிய மாநாடு

புதுச்சேரி, ஏப். 26-

புதுவை ஜிப்மர் மருத்துவ கல்லூரி வளாகத்தில் உள்ள ஜவஹர்லால் முதுகலை மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் நுண்ணுயிரியல் துறை சார்பில் சர்வதேச மருத்துவ அறிவியல் அகாடமியின் 41-வது தேசிய மாநாடு தொடங்கியது. 2-நாட்கள் நடைபெறும் இந்த மாநாடு 'ஒரே ஆரோக்கியம் மருத்துவ அறிவியலில் சமீபத்திய முன்னேற்றங்கள்' என்ற தலைப்பில், கல்வி பரிமாற்றம் மற்றும் அறிவியல் விவாத தளமாகவும் அமைந் துள்ளது.

நுண்ணுயிரியல் துறை தலைவர் பேராசிரியர் ராகுல் தோதாப்கர் வழிகாட்டுதல் படி இந்த மாநாட்டுக்கு அத்துறையை சேர்ந்த பேராசிரியர்கள் ராகேஷ் சிங், ராக்கி பிஸ்வாஸ், நோயல் ஜோசப் ஆகியோர் தலைமை தாங்கினர்.

மாநாட்டின் தொடக்க விழாவின் சிறப்பு விருந்தினராக ஜிப்மரின் இடைக்கால இயக்குநர் பேராசிரியர் காதம்பரி, முன்னாள் இயக்குநர் பேராசிரியர் பரிஜா, ஐ.எம்.எஸ்.ஏ. தலைவர் ஜகதீசன், செயல் இயக்குநரும், பொதுச்செயலாளருமான துக்ரால் மற்றும் ஐ.எம்.எஸ்.ஏ. புதுச்சேரி பிரிவு தலைவர் பேராசிரியர் சண்முகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டு ஒரே ஆரோக்கியம் என்பது மனிதர், விலங்கு மற்றும் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தை ஒருங்கிணைக்கும் முழுமை யான அணுகுமுறை எனவும், சுகா தாரம், வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல் துறைகளுக்கிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவது அவசியம் என வலியுறுத்தி சிறப்புரையாற்றினர்.

மேலும் இந்த மாநாட்டில் தொற்றுநோய்கள், தொற்றில்லா நோய்கள், புற்றுநோய், சுகாதாரத்தில் செயற்கை நுண்ணறிவு, மூலக்கூறு கண்டறிதல், மருந்து கண்காணிப்பு, பொது சுகாதார கண்காணிப்பு மற்றும் புதிய சிகிச்சை முறைகள் போன்ற பல துறைகளில் தேசிய மற்றும் சர்வதேச நிபுணர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இதில் பத்மஸ்ரீ விருது பெற்ற மருத்துவர்கள் பழனிவேல், மோகன், தியாகராஜன் மற்றும் பேராசிரியர் சண்முகம் ஆகியோர்களுக்கு மருத்துவ அறிவியலில் செய்த சிறப்பான பங்களிப்புக்காக ஐ.எம்.எஸ்.ஏ. சர்வதேச உரை விருதுகள் வழங்கப்பட்டன.

தினமலர்
தேசிய தமிழ் நாளிதழ்

# ஜிப்மரில் தேசிய மருத்துவ மாநாடு: ஆரோக்கியம் குறித்து நிபுணர்கள் ஆலோசனை




புதுச்சேரி: ஜிப்மர் வளாகத்தில் சர்வதேச மருத்துவ அறிவியல் அகாடமியின் 41-வது தேசிய மாநாடு நடந்தது.

ஒரே ஆரோக்கியம் என்ற கருப்பொருளில் நடந்த இந்த மாநாட்டில் மருத்துவ உலகின் நவீன முன்னேற்றங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

மாநாட்டை ஜிப்மர் பொறுப்பு இயக்குநர் காதம்பரி துவங்கி வைத்து, பேசுகையில், 'மனிதர்கள், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய மூன்றின் ஆரோக்கியத்தையும் ஒருங்கிணைந்த முறையில் அணுகுவதன் மூலமே எதிர்கால சுகாதார சவால்களை எதிர்கொள்ள முடியும்' என்றார்.

முன்னாள் இயக்குநர் பரிஜா, மருந்துகளுக்குக் கட்டுப்படாத கிருமிகளின் அச்சுறுத்தல் குறித்து மருத்துவ துறை வல்லுநர்களுடன் கலந்துரையாடினார். டாக்டர்கள் ஜெகதீசன், துக்ரால் மருத்துவ கல்வி, ஆராய்ச்சி தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தனர்.

மருத்துவத் துறையில் சிறப்பான பங்களிப்பை வழங்கியதற்காக மருத்துவர்கள் பழனிவேல், மோகன், தியாகராஜன், பேராசிரியர் சண்முகம் ஆகியோருக்கு சர்வதேச உரை விருதுகள் வழங்கி கவுரவிக்கப்பட்டன.

சிறப்பு அமர்வுகளில் புற்றுநோய், தொற்று நோய்கள் மற்றும் மருத்துவத்தில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு குறித்து தேசிய மற்றும் சர்வதேச நிபுணர்கள் விவாதித்தனர். உறுப்பினர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன. ஏற்பாடுகளை ஜிப்மர் நுண்ணுயிரியல் துறை பேராசிரியர்கள், நிர்வாகிகள் செய்திருந்தனர்.

Link: https://www.dinamalar.com/news/puducherry/national-medical-conference-at-jipmer-experts-advise-on-health/4209179

Government of India

Press Information Bureau

International Year of Cooperatives 2025

Cooperatives Build a Better World

# 41st National Conference of the International Medical Sciences Academy - IMSACON 2026 inaugurated at JIPMER

Posted On: 27 APR 2026 3:23PM by PIB Chennai




The 41st National Conference of the International Medical Sciences Academy - IMSACON 2026, was formally inaugurated at the Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research (JIPMER), Puducherry, marking the beginning of two days of academic exchange and scientific deliberations under the theme “One Health – Recent Advances in Medical Sciences” The conference is being organized by Department of Microbiology under the aegis of the International Medical Sciences Academy (IMSA), a professional organisation established in 1981. With a membership of over 4,000 Members and Fellows across India and abroad, IMSA continues to play a significant role in promoting academic excellence and professional collaboration. The Academy confers Fellowship (FIMSA), Membership (MIMSA), and Associate Membership to encourage participation across all levels of medical professionals.

The inaugural ceremony was graced by the Prof. Kadambari D, Officiating Director of JIPMER as Chief Guest along with Guest of Honour and Former JIPMER Director Prof. S.C. Parija, Dr. K. Jagadeesan, President IMSA, Dr. R.K. Thukral, Executive Director and Secretary General IMSA, and Prof. J. Shanmugam, Chairman, IMSA Pondicherry Chapter among other distinguished dignitaries and faculty members. The Chief Guest Prof. Kadambari D highlighted that One Health is a holistic approach integrating human, animal, and environmental health to

achieve optimal public health outcomes. She emphasized the importance of strengthening collaboration among sectors such as health, agriculture, and environment for early detection and response to emerging health threats.

Prof. S.C. Parija underscored the importance of addressing antimicrobial resistance (AMR) across human, animal, and environmental domains as a critical objective of the One Health approach. Prof. J. Shanmugam highlighted the role of continuous surveillance in preventing zoonotic diseases through coordinated efforts.

Dr. K. Jagadeesan emphasized the need for expanding academic initiatives and collaborative research both nationally and internationally to enhance awareness of One Health principles. Dr. R.K. Thukral presented an overview of the recent activities and contributions of IMSA.

IMSACON 2026 features an eminent panel of national and international experts addressing contemporary developments in infectious diseases, non-communicable diseases, oncology, artificial intelligence in healthcare, molecular diagnostics, pharmacovigilance, public health surveillance, and emerging therapeutic strategies. It has attracted participation from a large number of delegates representing various medical institutions across the country, reinforcing its status as a premier platform for interdisciplinary dialogue and scientific exchange.

Distinguished speakers include Padma Shri awardees Dr. C. Palanivelu and Dr. V. Mohan. During the conference, four eminent specialists—Dr. C. Palanivelu, Dr. V. Mohan, Dr. S.P. Thyagarajan, and Prof. J. Shanmugam—were honoured with the International IMSA Oration Awards in recognition of their outstanding contributions to medical science. A key highlight of the conference will be the IMSA Convocation on 26th April 2026, during which eligible members will be conferred the FIMSA in recognition of their academic and professional achievements.

The conference is being organised under the leadership of Prof. Rakesh Singh, Organising Chairman; Prof. Rakhi Biswas, Organising Secretary; and Prof. Noyal M. Joseph, Joint Organising Secretary-cum-Treasurer, all from the Department of Microbiology, JIPMER. The Department is headed by Prof. Rahul Dhodapkar, whose guidance has been instrumental in the successful conduct of the event.

Link: https://www.pib.gov.in/PressReleaseDetail.aspx?PRID=2255882&reg=6&lang=1

Government of India

Press Information Bureau

# சர்வதேச மருத்துவ அறிவியல் அகாடமியின் 41-வது தேசிய மாநாடு புதுச்சேரி ஜிப்மரில் நடைபெற்றது

प्रविष्टि तिथि: 27 APR 2026 3:23PM by PIB Chennai




சர்வதேச மருத்துவ அறிவியல் அகாடமியின் 41-வது தேசிய மாநாடு ஜிப்மர் வளாகத்தில் நடைபெற்றது. “ஒரே ஆரோக்கியம் – மருத்துவ அறிவியலில் அண்மைக்கால முன்னேற்றங்கள்” என்பது இந்த மாநாட்டின் மையப்பொருளாகும். இரண்டு நாட்கள் நடைபெற்ற மாநாட்டின் தொடக்க விழாவில், தலைமை விருந்தினராக கலந்து கொண்ட ஜிப்மரின் இடைக்கால இயக்குநர் பேராசிரியர் காதம்பரி, “ஒரே ஆரோக்கியம்” என்பது மனிதர், விலங்கு மற்றும் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தை ஒருங்கிணைக்கும் முழுமையான அணுகுமுறை என்று குறிப்பிட்டார். சுகாதாரம், வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல் துறைகளுக்கிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவது அவசியம் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

இம்மாநாட்டில் உரையாற்றிய சர்வதேச மருத்துவ அறிவியல் அகாடமியின் புதுச்சேரி பிரிவு தலைவர் பேராசிரியர் ஜே. சண்முகம், விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கு பரவும் நோய்களைத் தடுப்பதில் தொடர்ச்சியான கண்காணிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

நுண்ணுயிர் எதிர்ப்பு திறன் பிரச்சனையை மனிதர், விலங்கு மற்றும் சுற்றுச்சூழல் துறைகளில் ஒருங்கிணைந்து கையாள வேண்டியதன் அவசியத்தை பேராசிரியர் எஸ்.சி. பரிஜா எடுத்துரைத்தார்.

"ஒரே ஆரோக்கியம்" குறித்த விழிப்புணர்வை உயர்த்த தேசிய மற்றும் சர்வதேச அளவில் கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை டாக்டர் கே. ஜகதீசன் எடுத்துரைத்தார்.

இந்த மாநாட்டில், தொற்றுநோய்கள், தொற்றில்லாத நோய்கள், புற்றுநோய், சுகாதாரத்தில் செயற்கை நுண்ணறிவு, மூலக்கூறு கண்டறிதல், மருந்து கண்காணிப்பு, பொதுச் சுகாதார கண்காணிப்பு மற்றும் புதிய சிகிச்சை முறைகள் போன்ற பல துறைகளில் தேசிய மற்றும் சர்வதேச நிபுணர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர். நாடு முழுவதும் உள்ள பல மருத்துவ நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

நுண்ணுயிரியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் ராகேஷ் சிங், பேராசிரியர் ராக்கி பிஸ்வாஸ், பேராசிரியர் நோயல் எம். ஜோசப் ஆகியோர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினர்.

Link: https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2255883&reg=3&lang=2

மாலை
எக்ஸ்பிரஸ்
மாலை நாளிதழ்
MAALAI EXPRESS
மாநிலம் பயனுற!

# ஜிப்மரில் சர்வதேச மருத்துவ அறிவியல் அகாடமியின் தேசிய மாநாடு




புதுச்சேரி, ஏப். 27-

புதுவை ஜிப்மர் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உள்ள ஜவஹர்லால் முதுகலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் நுண்ணுயிரியல் துறை சார்பில் சர்வதேச மருத்துவ அறிவியல் அகாடமியின் 41வது தேசிய மாநாடு நடைபெற்றது. இரண்டு நாள் நடைபெற்ற இந்த மாநாடு 'ஒரே ஆரோக்கியம் மருத்துவ அறிவியலில் சமீபத்திய முன்னேற்றங்கள் என்ற தலைப்பில் கல்வி பரிமாற்றம் மற்றும் அறிவியல் விவாத தளமாகவும் அமைந்திருந்தது.

நுண்ணுயிரியல் துறை தலைவர் பேராசிரியர் ராகுல் தோதாப்கர் வழிகாட்டுதல்படி இந்த மாநாட்டுக்கு அத்துறையை சேர்ந்த பேராசிரியர்கள் மகேஷ் ராகேஷ் சிங், ராக்கி பிஸ்வாஸ், நோயல் ஜோசப் ஆகியோர் தலைமை தாங்கினர்.

மாநாட்டின் தொடக்க விழாவின் சிறப்பு விருந்தினராக ஜிப்மரின் இடைக்கால இயக்குநர் பேராசிரியர் காதம்பரி, முன்னாள் இயக்குநர் பேராசிரியர் பரிசு, ஐ.எம்.எஸ்.ஏ., தலைவர் ஜெகதீசன், செயல் இயக்குநரும், பொதுச் செயலாளருமான துக்ரால் மற்றும் ஐ.எம்.எஸ்.ஏ., புதுச்சேரி பிரிவு தலைவர் பேராசிரியர் சண்முகம் உள்ளிட்டோர் கலந்துகொண்டு ஒரே ஆரோக்கியம் என்பது மனிதர், விலங்கு மற்றும் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தை ஒருங்கிணைக்கும் முழுமையான அணுகுமுறை எனவும், சுகாதாரம் வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல் துறைகளுக்கு இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவது அவசியம் என வலியுறுத்தி சிறப்புரையாற்றினர்.

மேலும், இந்த மாநாட்டில் தொற்று நோய்கள், தொற்றில்லா நோய்கள், புற்றுநோய், சுகாதாரத்தில் செயற்கை நுண்ணறிவு மூலக்கூறு கண்டறிதல், மருந்து கண்காணிப்பு, பொது சுகாதார கண்காணிப்பு மற்றும் புதிய சிகிச்சை முறைகள் போன்ற பல துறைகளில் தேசிய மற்றும் சர்வதேச நிபுணர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இதில் பத்மஸ்ரீ விருது பெற்ற மருத்துவர்கள் பழனிவேல், மோகன், தியாகராஜன் மற்றும் பேராசிரியர் சண்முகம் ஆகியோர்களுக்கு மருத்துவ அறிவியலில் செய்த சிறப்பான பங்களிப்புக்காக ஐ.எம்.எஸ்.ஏ., சர்வதேச உரை விருதுகள் வழங்கப் பட்டன.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
27.4.2026 (திங்கட்கிழமை)

குறைந்த செலவில் உலகத்தரம் வாய்ந்த சிகிச்சை

# மருத்துவ சுற்றுலா மையமாக விளங்கும் புதுச்சேரி



## வெளிமாநில நோயாளிகள் படையெடுப்பு

மருத்துவ சுற்றுலா என்பது உயர்தர மருத்துவ சிகிச்சையை மலிவான விலையில் பெற, நோயாளிகள் தங்கள் நாட்டை விட்டு வேறு நாடுகளுக்கு, மாநிலங்களுக்கு பயணம் செய்யும் நடைமுறையாகும்.

இந்தியாவில், குறிப்பாக புதுச்சேரியில் குறைந்த செலவில் உலகத்தரம் வாய்ந்த சிகிச்சை, நவீன தொழில்நுட்பம் மற்றும் அனுபவம் வாய்ந்த மருத்துவர்களைக் கொண்டு முதன்மையான மருத்துவ சுற்றுலா மையமாக விளங்குகிறது.

### 9 மருத்துவ கல்லூரிகள்

குறிப்பாக பல் பராமரிப்பு, ஒப்பனை அறுவை சிகிச்சை, கருவுறுதல் சிகிச்சை, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை, புற்றுநோய் சிகிச்சை மற்றும் இருதய சிகிச்சை இதில் முக்கிய சிகிச்சைகளாக விளங்குகிறது. சர்வதேச தரம் வாய்ந்த மருத்துவமனை, குறைந்த செலவில் உயர் தர சிகிச்சை வழங்கப்படுகிறது.

இங்கு ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான நோயாளிகள் வெளிநாடுகள், வெளிமாநிலங்களில் இருந்து வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். அதன் அடிப்படையில் மருத்துவ சுற்றுலா மேம்படுகிறது. சிறிய மாநிலமான புதுவையில் மருத்துவ கல்விக்கு அதிக முக்கியத்தும் கொடுக்கப்படுகிறது. இங்கு மத்தியஅரசின் நிறுவனமாக ஜிப்மர் மருத்துவக்கல்லூரி, புதுச்சேரி அரசு இந்திராகாந்தி மருத்துவக்கல்லூரி, 3 தனியார் மருத்துவக்கல்லூரிகள், 4 நிகர்நிலை பல்கலைக்கழகங்கள் என மொத்தம் 9 மருத்துவ கல்லூரிகள் உள்ளன. இங்கு மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த பல்வேறு பாடப்பிரிவுகள், செவிலியர் கல்லூரிகள் உள்ளன.

### புதுவைக்கு வருகின்றனர்

இந்த படிப்புகளுக்கு சென்டாக் கலந்தாய்வு மூலம் மாணவர் சேர்க்கை நடத்தப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த படிப்புகளுக்கு சுமார் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் வெளிமாநிலம், வெளிநாடுகளை சேர்ந்தவர்கள் தான். இந்த கல்லூரிகளில் புதுச்சேரி மாணவர்களுக்கான ஒதுக்கீடு, வெளிமாநில இட ஒதுக்கீடு, வெளிநாட்டு வாழ் இந்தியர்களுக்கான ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. புதுச்சேரியை பொருத்தவரை தரமான கல்வி கிடைப்பதாலும், சட்டம்–ஒழுங்கு பாதுகாப்பு, குறைந்த செலவில் மருத்துவ கல்வி கற்கும் வாய்ப்புகள் இருப்பதாலும், இது ஒரு சிறந்த சுற்றுலா தலம் என்பதாலும் மாணவ–மாணவிகள் கல்வி பயில புதுவை மாநில கல்லூரிகளையே அதிகம் தேர்வு செய்கின்றனர். இதில் மருத்துவ துறைகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்கி கொடுக்கும் சிறந்த படிப்பிற்காக மாணவர்கள் புதுவையை தேடி வந்து கல்வி பயில்கின்றனர்.

### லட்சக்கணக்கான நோயாளிகள்

இதே போல் மருத்துவத்தின் பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்ற ஏராளமான மருத்துவ பயிற்சியாளர்கள் இங்கு உள்ளனர். மருத்துவக் கண்டறிதல் மற்றும் சிகிச்சைக்காக ஆண்டுதோறும் லட்சத்திற்கும் மேற்பட்ட நோயாளிகள் புதுச்சேரிக்கு வருகின்றனர்.

இங்குள்ள ஜிப்மர் மருத்துவமனையில் அதிநவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய மருத்துவம் கிடைப்பதால் வட மாநிலத்தை சேர்ந்த நோயாளிகள் பலர் புதுவைக்கு வந்து மாதக்கணக்கில் தங்கி உயர் சிகிச்சை பெற்று செல்கின்றனர். இதற்காக ஜிப்மர் மருத்துவமனை அருகே நோயாளிகளின் உறவினர்கள் தங்குவதற்காக பல குடியிருப்புகள் செயல்பட்டு வருகிறது. இதேபோல் புதுவையில் ஏராளமான மருந்து தொழிற்சாலைகளும் உள்ளன.

### ஆலோசனைகள்

புதுவை அரசு ஆன்மிக சுற்றுலாவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. மருத்துவச் சுற்றுலாவின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, சுற்றுலாத் துறை, மருத்துவமனைகள் இணைந்து செயல்படுகிறது. இதன் மூலம் புதுவைக்கு வரும் நோயாளிகளுக்கு ஆன்மிக சுற்றுலா தொடர்பாக பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டு அவர்களுக்கு வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகிறது.

புதுச்சேரி அரசு பொது மருத்துவமனை, கதிர்காமம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, ராஜீவ்காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனைகளில் மட்டும் நாள்தோறும் சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெளிப்புற நோயாளிகள் சிகிச்சை பெற்று செல்கிறார்கள். அவர்களில் 30 முதல் 40 சதவீதம் பேர் தமிழகத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. உள்புற நோயாளிகளாக சுமார் 1,500–க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.




## ஜிப்மரில் வெளிமாநில நோயாளிகளுக்கான சிகிச்சை வழிகாட்டி




புதுச்சேரியில் உள்ள ஜவஹர்லால் நேரு முதுகலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (ஜிப்மர்), இந்தியாவின் மிகச்சிறந்த மருத்துவமனைகளில் ஒன்றாகும். வெளிமாநிலங்களில் இருந்து வரும் நோயாளிகள் இங்கு தடையின்றி சிகிச்சை பெற கீழ்க்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றலாம்.

**நோயாளி பதிவு**

ஜிப்மரில் சிகிச்சை பெற பதிவு செய்வது மிக முக்கியமான முதல் படியாகும்.

ஆன்லைன்: ஜிப்மர் இணையதளம் அல்லது 'JIPMER Patient Registration' மொபைல் செயலி மூலம் முன்கூட்டியே பதிவு செய்வது நல்லது. இது மருத்துவமனையில் காத்திருக்கும் நேரத்தைக் குறைக்கும்.

நேரடிப் பதிவு: மருத்துவமனையில் உள்ள வெளிநோயாளி பிரிவு (OPD) கவுண்டர்களில் காலை 7.30 மணி முதல் 11 மணி வரை பதிவு சீட்டு வழங்கப்படும்.

### தேவையான ஆவணங்கள்

வெளிமாநில நோயாளிகள் அடையாளச் சான்றாக ஆதார் அட்டை அல்லது வாக்காளர் அடையாள அட்டை வைத்திருப்பது அவசியம்.

மருத்துவ ஆவணங்கள்: இதற்கு முன் சிகிச்சை பெற்ற அறிக்கைகள், எக்ஸ்-ரே, ஸ்கேன் ரிப்போர்ட்கள் மற்றும் பரிந்துரை கடிதங்கள். வருமானச் சான்று: வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் (BPL) இலவச சிகிச்சை பெற ரேஷன் கார்டு அல்லது வருமானச் சான்றிதழ் அவசியம்.

ஆயுஷ்மான் பாரத் கார்டு (PM-JAY): மத்திய அரசின் காப்பீட்டுத் திட்டம் உள்ளவர்கள் அதன் அட்டையைக் கொண்டு வர வேண்டும்.

### வெளிநோயாளி பிரிவு நேரங்கள்

திங்கள் முதல் வெள்ளி வரை: காலை 8 மணி முதல் மதியம் 1 மணி வரை. சனி: காலை 8 மணி முதல் காலை 11.30 மணி வரை.

ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாட்களில் வெளிநோயாளி பிரிவு இயங்காது (அவசர சிகிச்சை பிரிவு மட்டும் செயல்படும்).

### கட்டண விவரங்கள்

ஜிப்மரில் பொதுவான பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைகள் இலவசம் அல்லது மிகக் குறைந்த கட்டணத்தில் வழங்கப்படுகின்றன.

சிறப்பு அறுவை சிகிச்சைகள் மற்றும் உயர் ரக பரிசோதனைகளுக்கு (எம்.ஆர்.ஐ., சி.டி.ஸ்கேன்) அரசாங்க விதிகளின்படி குறிப்பிட்ட கட்டணம் வசூலிக்கப்படும். பி.பி.எல். அட்டை வைத்திருப்பவர்களுக்கு பெரும்பாலான சிகிச்சைகள் இலவசம்.

### தங்கும் வசதி மற்றும் உணவு

ஜிப்மர் வளாகத்திற்குள் நோயாளிகளின் உதவியாளர்களுக்காகக் குறைந்த கட்டணத்தில் தங்கும் விடுதிகள் உள்ளன. ஆனால், கூட்டம் அதிகமாக இருக்கும் என்பதால் முன்கூட்டியே சரிபார்க்கவும்.

மேலும் மருத்துவமனைக்கு வெளியே கோரிமேடு மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பல்வேறு பட்ஜெட்டுகளில் விடுதிகள் கிடைக்கின்றன. மருத்துவமனை வளாகத்திற்குள் மானிய விலையில் உணவகங்கள் செயல்படுகின்றன.

### மொழி உதவி

புதுச்சேரியில் தமிழ் மற்றும் ஆங்கிலம் பிரதானமாகப் பேசப்படுகிறது. இருப்பினும், ஜிப்மர் ஒரு மத்திய அரசு நிறுவனம் என்பதால், இந்தி மற்றும் பிற மொழிகள் தெரிந்த பணியாளர்களும் இருப்பார்கள். பெரும்பாலான மருத்துவர்கள் ஆங்கிலத்தில் பேசக் கூடியவர்கள்.

ஜிப்மரில் மேல்சிகிச்சை பெற நினைப்பவர்கள், உங்கள் சொந்த மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவமனையிலிருந்து பரிந்துரை கடிதம் கொண்டு வருவது மேல் சிகிச்சை பெறுவதை எளிதாக்கும்.

சில சிறப்புப் பரிசோதனைகளுக்குக் காத்திருப்போர் பட்டியல் இருக்கலாம். எனவே, குறைந்தது 2 முதல் 3 நாட்கள் தங்குவதற்குத் திட்டமிட்டு வருவது நல்லது.

விபத்து அல்லது தீவிர உடல்நலக் குறைவு ஏற்பட்டால் 24/7 செயல்படும் அவசர சிகிச்சை பிரிவை அணுகலாம்.